**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II**
**SRIVILLIPUTTUR.**

C.C. No: 434 of 2020

DATE :26.06.2023

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துலட்சுமி | Caste | |
| Father/Husband's Name | சங்கரசுப்பிரமணியன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of June 2023 Time: 4.40-4.49 P.M

**முதல் விசாரணை** –

1) நான் ஸ்ரீவில்லிபுத்தூர் கீழப்புதுத்தெருவில் வசித்து வருகிறேன். ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்ட வளர்ச்சி அலுவலகத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 3.2.2020ம் தேதி மதியம் 2.40 மணியளவில் நான் அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு சாப்பிடுவதற்காக நடந்து வந்து கொண்டிருந்தேன்.எங்கள் வீடுள்ள சந்தில் நுழைந்தபோது என் கழுத்தில் அணிந்திருந்த செயினை கழுத்தில் இருந்து பிடித்து இழுத்தது தெரிந்து திரும்பி பார்த்தேன். அப்போது எதிரி எனது செயினை பறித்துவிட்டு ஓடினார். நான் கத்தினேன். என் சத்தம் கேட்டு அங்கிருந்த முருகன் எதிரியை பிடிக்க ஓடினார் ஆனால் அவரால் பிடிக்க முடியவில்லை ஓடிவிட்டான். பிறகு வீட்டிற்கு வந்து என் மகனுக்கு போன் செய்தேன் என் மகன் வந்ததும் விபரம் சொல்லி அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தோம் எதுவும் தெரியவில்லை பிறகு 4.30மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரை நான் தான் எழுதினேன். புகாரை வீட்டில் வைத்தே எழுதினேன். (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2) மறுநாள் போலிசார் எங்களுக்கு போன் செய்து செயினையும், செயினை பறித்து சென்றவரையும் பிடித்துவிட்டதாக சொன்னார்கள் நானும், என் மகனும் காவல் நிலையம் சென்று செயினை அடையாளம் காண்பித்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக விருதுநகர் சிறையில் அடையாள அணிவகுப்பு நடந்த போது என் செயினை பறித்து சென்ற நபரை அடையாளம் காண்பித்தேன். நான் எதிரியை என் நகையை பறித்து சென்ற போது பார்த்தேன். அவரை எனக்கு தெரிந்ததால் அடையாளம் காண்பித்தேன். என் நகையை பறித்து சென்ற போது பச்சை கலர் டீசர்ட்டும், புளூ கலர் கட்டம் போட்ட

லுங்கியும் அணிந்திருந்தார். எனது செயினை நீதிமன்றத்தில் மனுச்செய்து பெற்றுவிட்டேன். அந்த செயின் தற்போது என் வசம் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் என்னுடையது தான் அது தான் என்னிடம் இருந்து பறித்து செல்லப்பட்ட செயின் அதைத்தான் நீதிமன்றத்தில் இருந்து வாங்கிச்சென்றேன். (**அந்த செயின் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II**
**SRIVILLIPUTTUR.**

C.C. No: 434 of 2020

DATE :26.06.2023

Depositions of witness for Prosecution

PW: 2

| Name | முருகன் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | இசக்கியாபிள்ளை | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of June 2023 Time: 4.50- 4.55 P.M

**முதல் விசாரணை –**

1) நான் ஸ்ரீவில்லிபுத்தூர் இரட்டை காளியம்மன் கோவில் தெருவில் கீழரதவீதியில் வசித்து வருகிறேன். நான் புரோட்டா மாஸ்டராக உள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு முன்பாக சாட்சி சொன்ன முத்துலட்சுமி எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 2020ம் வருடம் 2வது மாதத்தில் தேதி ஞாபகம் இல்லை ஒருநாள் மதியம் 2.40 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது முத்துலட்சுமியின் என் செயினை பறித்து செல்வதாக சத்தம் போட்டார் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது ஆஜர் எதிரி செயினை பறித்துக்கொண்டு ஓடினார். நான் அவரை பின்னாலேயே துரத்தினேன். அவர் நேராக சென்று வலதுபக்கமாக சென்று திரும்பி ஓடிவிட்டார். அவர் ஓடிய வேகத்திற்கு என்னால் ஓட முடியவில்லை அதனால் திரும்ப பைக்கை எடுத்துக்கொண்டு தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை. அதன் பிறகு முத்துலட்சுமியின் மகன் வரவும் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் நானும் உடன் சென்றேன் பிறகு விருதுநகர் சிறைக்கு சென்று அடையாள அணிவகுப்பு நடந்த அன்று நானும் சென்று எதிரியை அடையாளம் காண்பித்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II**
**SRIVILLIPUTTUR.**

C.C. No: 434 of 2020

DATE :26.06.2023

Depositions of witness for Prosecution

PW: 3

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணக்குமார் | Caste | |
| Father/Husband's Name | சங்கரசுப்பிரமணியன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of June 2023 Time: 4.55- 5.02 P.M

**<u>முதல் விசாரணை</u> –**

1) நான் ஸ்ரீவில்லிபுத்தூர் கீழப்புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் மெடிக்கல் ரெஃப் ஆக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது அம்மா. அ.சா.2 முருகன் எங்கள் தெருவிலேயே வசித்து வருகிறார். கடந்த 3.2.2020ம் தேதி மதியம் 2.50 மணியளவில் என் அம்மா எனக்கு போன் செய்து அழுதுகொண்டே தனது செயினை பறித்துச்சென்றுவிட்டார்கள் என்றும், உடனே வீட்டிற்கு வா என்று சொன்னார்கள்.நான் அப்போது ராஜபாளையத்தில் இருந்து ஆண்டாள் தியேட்டர் தாண்டி வந்துகொண்டிருந்தேன் நான் 5 நிமிடத்தில் வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து அம்மாவிடம் விசாரித்துவிட்டு வெளியில் போய் விசாரித்து பார்த்தோம். அப்போது முருகனிடம் கேட்டதற்கு தானும் விரட்டிச்சென்றதாகவும் ஆனால் பிடிக்க முடியவில்லை என்றும் சொன்னார். பிறகு பைக்கை எடுத்துக்கொண்டு அக்கம் பக்கம் தேடிப் பார்த்தோம் ஆனால் பிடிக்க முடியவில்லை. பிறகு அன்றைய தினம் மாலை 4.30 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். மறுநாள் காலையில் 11 மணியளவில் போலிசார் போன்செய்து திருடனைப் பிடித்துவிட்டதாகவும், செயின் கிடைத்துவிட்டதாகவும் சொன்னார்கள். நானும் என் அம்மாவும் நேரில் சென்று செயினை அடையாளம் காண்பித்தோம். அங்கு எதிரியை என் அம்மா பார்த்துவிட்டு இவன்தான் செயினை பறித்ததாக அடையாளம் காண்பித்தார். பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து செயினை பெற்றுக்கொண்டோம். பிறகு என் அம்மா விருதுநகர் சிறைக்கு சென்று அடையாள அணிவகுப்பில் எதிரியை அடையாளம் காண்பித்தார். நான் சிறை வரை அம்மாவுடன் சென்றேன். ஆனால் அவர் மட்டும் தான் உள்ளே போனார் நான் போகவில்லை முருகனும் அடையாள அணிவகுப்பிற்கு உள்ளே சென்று அடையாளம் காண்பித்தார் எனக்கு நேரடியாகத் தெரியும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**